# <u>மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சங்ககிரி</u>

**அசல் வழக்கு எண். 62/2022**

பெயர்: **சரவணன்** நாள்: 28.04.2026

வா.சா.2 – பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை.

வா.சா.2 – சரவணன் - சத்திய பிரமாணத்தின் பேரில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.

<u>குறுக்கு விசாரணை தொடக்க நேரம்1.16</u>

இந்த வழக்கின் வாதி மற்றும் பிரதிவாதி யார் என்று எனக்கு தெரியுமா என்றால் வாதியை தெரியும் பிரதிவாதி யார் என்று எனக்கு தெரியாது. இந்த வழக்கிற்காக சாட்சி சொல்வதற்காக இந்த நீதிமன்றத்திலிருந்து அழைப்பாணை வந்ததா என்றால் இல்லை. யார் அழைத்தன் பேரில் சாட்சி சொல்ல வந்திருக்கிறேன் என்றால் வாதி முருகன் அழைத்தன் பேரில் வந்துள்ளேன். முருகன் என்ன பரிகாரம் கோரி இந்த தாவாவை தாக்கல் செய்துள்ளார் என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் எனக்கு தெரியாது. இந்த தாவா சொத்தானது எந்த கிராமத்தில் என்ன சர்வே எண்ணில் உள்ளது என்றால் இடங்கணசாலை கிராமம் ச.எண்.573/1 ஆகும். தாவா சொத்தின் விஸ்தீரணம் எவ்வளவு என்றால் 15 ஏக்கர் 20 செண்ட் நிலமாகும். இந்த நிலத்தில் யார் யார் குடியிருக்கிறார்கள் என்றும் யார் விவசாயம் செய்து வருகிறார்கள் என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் நிறைய குடும்பங்கள் உள்ளார்கள். யார் யார் என்று எனக்கு தெரியாது. நான் என்ன தொழில் செய்துவருகிறேன் என்றால் தறி தொழில் செய்துவருகிறேன். தாவா சொத்திலிருந்து நான் குடியிருக்கும் இடம் சுமார் எவ்வளவு கிலோ மீட்டர் இருக்கும் என்றால் சுமார் ¼ கி.மீ இருக்கும். நான் குடியிருக்கும் இடம் தாவா சொத்திலிருந்து 4 கி.மீ. தொலையில் இருக்கும் என்று இந்த வழக்கிற்காக ¼ கி.மீ. என்று பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. வாதியை எனக்கு எந்த முறையில் எவ்வளவு ஆண்டுகளாக தெரியும் என்றால் 15 ஆண்டுகளாக எனக்கு வாதியை தெரியும், நானும் அவரும் ஒன்றாக தறி ஓட்டியதன் வகையில் அவரை எனக்கு தெரியும். வாதி கிரையம் செய்ததாக சொல்லக்கூடிய நபர்களை எனக்கு தெரியுமா என்றால் எனக்கு அவர்களை தெரியும், ஆனால் பழக்கம் இல்லை. வாதி கிரையம் வாங்கியதாக சொல்லும் சொத்தின் செக்குபந்தி விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியும். தெற்குபுறம் ரோடு உள்ளது, மேற்கு இதே சர்வே எண்ணில் மற்ற

நிலங்கள் உள்ளது. வடக்கு இதே சர்வே எண்ணில் இதர நிலங்கள் உள்ளது. கிழக்கு வேறு சர்வே எண்ணில் பிளாட் உள்ளது. தாவா சொத்தையே எனக்கு தெரியாது என்பதால் தவறான செக்குபந்தி விவரங்களை சொல்கிறேன் என்றால் சரியல்ல. வாதிக்கு கிரையம் செய்த சின்னதம்பி வகையறாவிற்கு நிலம் எப்படி பாத்தியம் என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. வாதி கிரையம் வாங்கியதாக சொல்லும் சமயத்தில் நான் பத்திரம் எழுதுபவரிடம் வேலை செய்து வந்தேன் என்றால் சரியல்ல. பத்திரத்தில் சாட்சி கையொப்பம் செய்ய யார் என்னை அழைத்தார்கள் என்றால் மகுடஞ்சாவடி சார்பதிவாளர் அலுவலகத்திற்கு ஒரு வேலையாக சென்றிருந்த போது சாட்சி கையொப்பம் போட சொன்னார்கள். வாதி கிரையம் வாங்கிய பத்திரத்தை யார் எழுதியது என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது.யார் யார் வாதிக்கு கிரையம் செய்து வைத்தார்கள் என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் சின்னதம்பி குடும்பத்தார்கள் எழுதி வைத்தார்கள் ஆனால் அவர்களுடைய பெயர்கள் எனக்கு தெரியாது. பிரதிவாதிகள் எந்த ஊரில் குடியிருந்து வருகிறார்கள் என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் மெய்யனூரில் குடியிருந்து வருகிறார்கள். பிரதிவாதிகள் தாவா சர்வே எண்ணில் குடியிருந்து வருகிறார்கள் என்றால் சரிதான். தாவா சர்வே எண்ணை பொறுத்து பிரதிவாதிகளின் தாயார் வழக்கு தாக்கல் செய்து அவருக்கு ஆதரவாக தீர்ப்பாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது என்றால் எனக்கு தெரியாது. நான் தாக்கல் செய்துள்ள பிரமாண பத்திரிக்கையில் பிரதிவாதிகளுக்கும் வாதிக்கும் பிரச்சனையானது என்று குறிப்பிட்டுள்ளதில் என்ன பிரச்சனை என்ன தேதியில் ஆனது என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் எனக்கு தெரியாது. வாதி எப்போது தாவா தாக்கல் செய்துள்ளார் என்றால் வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்ற விவரம் தெரியும் ஆனால் எந்த தேதியில் தாக்கல் செய்துள்ளார் என்று தெரியாது. தாக்கல் செய்து சுமார் ஒரு ஆண்டு கழித்து தான் எனக்கு தெரியும். வாதி முருகன் பிரதிவாதிகளுக்கு இடையூறு செய்ய வேண்டும் என்ற எண்ணத்தில் சின்னதம்பி வகையறாவுடன் கிரைய பத்திரம் ஏற்படுத்தி கொண்டுள்ளார் என்றும் அவர் கிரைய ஒப்பந்தத்தில் குறிப்பிட்டுள்ள சொத்து சின்னதம்பி வகையறாவிற்கு பாத்தியபடவும் இல்லை, அனுபவத்திலும் இல்லை என்றால் சரியல்ல. வாதியுடைய கிரைய பத்திரம் தயார் செய்த சமயத்தில் இந்த பத்திரத்தை தயார் செய்த ராம்சின்னப்பா என்பவரின் அலுவலகத்தில் பணிபுரிந்து வந்ததால் சாட்சியாக கையொப்பம் செய்துள்ளேன் என்றும் தாவா சொத்தை பற்றி எனக்கு தெரியாது என்று சொன்னால் சரியல்ல. எனக்கு பிரதிவாதிகளே யார் என்று

தெரியாது என்றும், வாதி பிரதிவாதிகளுக்கிடையே என்ன பிரச்சனை என்று தெரியாது என்று என் குறுக்கு விசாரணையில் சாட்சியம் அளித்துள்ளநிலையில் என்னுடைய முதல் விசாரணையில் பிரதிவாதிகளை தெரியும் என்று வாதி பிரதிவாதிகளுக்கிடையே ஏற்பட்ட பிரச்சனை தெரியும் என்றும் பொய்யாக குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரியல்ல. வாதிக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிப்பதால் என்னுடைய சாட்சியம் ஏற்கதக்கதல்ல என்றால் சரியல்ல.

குறுக்கு விசாரணை முடிந்த நேரம் 1.41PM

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல, என்னால் தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு, அவரால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு, சாட்சியால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டு என்முன்னால் சாட்சியின் கையெழுத்து / கைரேகை பெறப்பட்டது.

ELAMATHI R

Digitally signed by ELAMATHI R
Date: 2026.04.28 17:58:50 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
சங்ககிரி.